பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**10 03 2026 TUESDAY 6.30 PM**

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) திருச்சியில் 5 ஆயிரத்து 650 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை தொடங்கிவைக்கிறார்.

2) மதுரை விமான நிலையத்தை, சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

3) தமிழகத்தில் MBBS மற்றும் BDS மருத்துவப் படிப்புகளில் விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீட்டு எண்ணிக்கை உயர்த்தப்பட்டுள்ளது.

4) நாட்டில் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு என தவறான தகவல் பரப்பப்படுவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

5) உலக பாரா தடகள கிராண்ட்பிரிக்ஸ் போட்டிகள் புதுதில்லியில் இன்று தொடங்கியது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை திருச்சிராப்பள்ளியில் 5 ஆயிரத்து 650 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவடைந்த திட்டங்களை தொடங்கிவைத்து புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

எரிசக்தி, பெட்ரோலியம், நெடுஞ்சாலை, ஊரக வளர்ச்சித் திட்டங்களையும், ரயில்வேத் திட்டங்களையும் பிரதமர் தொடங்கிவைக்க உள்ளதாகவும், தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள இருப்பதாகவும் எமது செய்தியாளர் கூறுகிறார்.

***(Sound Byte — சிதம்பரநாதன் — 70 Sec. )***

<<<<<<<<>>>>>>

மதுரை விமான நிலையத்தை, சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்துவதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்திற்கு பின், செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், கோவில் நகரம் என்று அழைக்கப்படும் மதுரை மாநகரில் அமைந்துள்ள இந்த

விமான நிலையம், மாநிலத்தின் பழமையான விமான நிலையமாகும் என்றார்.

தென் தமிழக பகுதிகளுக்கான நுழை வாயிலாகவும், சுற்றுலா பயணிகள் மற்றும் ஆன்மீக யாத்ரிகர்களுக்கு இந்த விமான நிலையம் பெரிதும் பயன்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தற்போது, சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால். தென் தமிழகத்தின் வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் மேம்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளிலிருந்து வரும் ஆன்மீக பயணிகளும், தொழில் அதிபர்களும் இதனால் பெரிதும் பயனடைவர் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<<<>>>>>>

வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர் சூழல் காரணமாக தமிழகத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்க முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தலைமையில் அவசர ஆலோசனைக்கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குபின் முதலமைச்சர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வளைகுடா நாடுகளில் வாழும் தமிழர்களின் பாதுகாப்பையும், அங்குள்ள தமிழக மீனவர்களின் நலனை உறுதி செய்யவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய அரசுக்கு தாம் கடிதம் எழுதியதை ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்ததாக கூறியுள்ளார்.

இந்த போரால் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாட்டினால் பொதுமக்களுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் மாநிலத்தில் உள்ள குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கும் எந்தவிதத்திலும் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வணிக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும்பட்சத்தில், உணவகங்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும், தேவைப்படும் கூடுதல் மின்சாரத்தை பெற்று வழங்கிட வேண்டும் என்றும் தாம் வலியுறுத்தியுள்ளதாகவும் ஆலோசனைக் கூட்டத்தில் முதலமைச்சர் தெரிவித்ததாக கூறியுள்ளார்.

<<<<<<<<>>>>>>

நாட்டில் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு என தவறான தகவல் பரப்பப்படுவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், எரிவாயு சிலிண்டர் பற்றாக்குறையால் உணவகங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை என்று தெரிவித்தார்.

திமுக ஏற்கனவே அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றும், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பிரகாசமான வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறினார்.

தங்கள் கூட்டணி வெற்றிபெற்றால் அஇஅதிமுக தலைமையிலான அரசே அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாளை பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்துகொள்ளும் தேசிய ஜனநாயக கூட்டணியின் பொதுக்கூட்டம், தமிழகத்தின் ஆட்சி மாற்றத்தை உறுதி செய்யும் கூட்டமாக அமையும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் மருத்துவப்படிப்புகளில் விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீட்டு எண்ணிக்கை உயர்த்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மாநில அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அரசு மருத்துவக் கல்லூரிகளில் எம் பி பி எஸ் படிப்புகளுக்கான இடங்கள் 7-ல் இருந்து 13-ஆகவும், பல் மருத்துவப் படிப்புகளுக்கான இடங்கள் ஒன்றிலிருந்து இரண்டாகவும், விளையாட்டு ஒதுக்கீட்டின்கீழ் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவப் படிப்புகளில் விளையாட்டு வீரர்கள் தங்களுக்கான இடஒதுக்கீட்டை உயர்த்தித் தர வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை ஏற்று இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், திறமையான விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் நோக்கிலும் இடஒதுக்கீட்டை அதிகரிக்க அரசு முடிவு செய்ததாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>>

மாநில அரசு பத்திரிகையான தமிழரசு மின்னிதழின் இணையதள பயன்பாடு மற்றும் கைபேசி செயலியை செய்தித்துறை அமைச்சர் திரு சாமிநாதன் இன்று சென்னையில் தொடங்கிவைத்தார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள மாநில அரசின் செய்திக்குறிப்பில், தமிழ் மொழியின் தொன்மை சிறப்பு மற்றும் தமிழ்சார் அறிவை காலத்திற்கு ஏற்ப நவீன தொழில்நுட்பத்தில் உலகெங்கும் கொண்டு சேர்க்கும் நோக்கில் தற்போது முழுமையான மின்னிதழ் **e-Book / e-Magazine** வடிவில் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழியியல் கல்வி, சமூக மாற்றங்கள், பன்னாட்டு பாரம்பரியம், ஆய்வுக்கட்டுரைகள் உள்ளிட்டவை இந்த இதழில் வெளியிடப்படும்.

சட்டப்பேரவையில் ஆற்றும் முக்கிய உரைகள், அரசின் முக்கிய அறிவிப்புகள் உள்ளிட்டவையும் இனி மின்னிதழாக வெளியிடப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும் தமிழரசு மின்னிதழில் போட்டித் தேர்வுகளுக்கான கேள்விகள், கட்டுரை எழுதும் போட்டிகள் ஆகியவை இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>

தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மைய தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 21 Sec.)***

<<<<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

விருதுநகர் மாவட்டத்தில் பிளவக்கல் பெரியாறு அணைப்பகுதியில் **10** கோடி ரூபாய் மதிப்பில் பூங்கா புனரமைக்கும் பணியை மாநில அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் இன்று அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கிவைத்தார்.

-------------

சென்னை துறைமுகம் - மதுரவாயல் தேசிய நெடுஞ்சாலை பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாக தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மண்டல இயக்குநர் திரு. **Virendra Samyal** தெரிவித்துள்ளார்.

---------------

தமிழகம் முழுவதும் போலியாக காப்பீட்டு நிறுவனங்களின் பெயரில் ஆயிரக்கணக்கான நபர்களிடம் பல லட்சம் ரூபாய் பணத்தை மோசடி செய்த ஐந்து பேர் கொண்ட கும்பலை தூத்துக்குடி மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவு காவல்துறையினர் இன்று கைது செய்தனர்.

---------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் சடையம்பட்டி கிராமத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சுமார் **10** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் இன்று திறந்துவைக்கப்பட்டது.

---------------

காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில், தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட வருவாய் அலுவலர் திரு முருகேசன் தலைமையில் நடைபெற்றது.

-------------

சட்டப்பேரவைத் தேர்தல் பணிக்காக உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த ஐந்து கம்பெனி துணை ராணுவப்படையினர் மற்றும் மத்திய ரிசர்வ் காவல் படையை சேர்ந்த **600** வீரர்கள் சென்னை பெரம்பூர் வந்தடைந்தனர்.

<<<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**உலக பாரா தடகள கிராண்ட்பிரிக்ஸ் போட்டிகள் புதுதில்லியில் இன்று தொடங்கியது.**

**ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் இன்று இதற்கான தொடக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றன.**

**இந்தியாவின் சார்பில் Sumit Antil, Mariyappan Thangavelu, Praveen Kumar, Ajeet Singh, Devendra Singh Gurjar, Simran Preeti Pal உள்ளிட்ட 219 தடகள வீரர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.**

**<<<<<<<<END>>>>>>**